# DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.91/2017**
**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name : திரு. குசேலன் | Caste: |
| Father's Name: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.09.2023

(A1, A3 are present. A2 is absent. Petition U/s.317 Cr.P.C is filed and allowed).

முதல் விசாரணை–

நான் கோணங்காட்டில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு சாட்சிகள் ராதாகிருஷ்ணன், சாந்தி மற்றும் வினோ ஆகியோரைத் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. 2 வது எதிரி ராஜேஷ் என்பவரை எனக்குத் தெரியாது. எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்ததாகவும் அப்போது 07.07.2014 ம் தேதி மாலை 05.30 மணி அளவில் நான் குளப்பாடு கொன்னங்கோடு அருகில் வரும் போது சாட்சி ராதாகிருஷ்ணன் என்பவர் இடது பக்க வயிற்றில் ரத்தக் காயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்ததாகவும் அவர் தன்னை காப்பாற்றச் சொல்லி சத்தம் போட்டதாகவும் நானும் சாட்சி வினோ என்பவரும் காயம்பட்ட ராதாகிருஷ்ணனை அவரது ஆட்டோவில் ஏற்றி சாட்சி வினோ ஆட்டோவை ஓட்ட சிகிச்சைக்காக குளச்சல் மருத்துவமனை கொண்டு வந்து சேர்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்

**கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**குறுக்கு விசாரணை- ( எதிரிகள் தரப்பில்)**

**இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

## DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.91/2017**
**Prosecution Witness - PW2**

| | |
|---|---|
| Name : திரு. லாசர் | Caste: |
| Father's Name: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.09.2023

(A1, A3 are present. A2 is absent. Petition U/s.317 Cr.P.C is filed and allowed).

முதல் விசாரணை–

நான் பிலாக்கோட்டில் குடியிருக்கிறேன். நான் திங்கள் சந்தை ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறேன். அதே ஸ்டேண்டில் சாட்சி ராதாகிருஷ்ணன் என்பவரும் ஆட்டோ வைத்து ஓட்டி வந்தார். அதனால் அவர் எனக்குத் தெரியும். சாட்சி சாந்தி என்பரை எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. 2 வது எதிரி ராஜேஷ் என்பவரை எனக்குத் தெரியாது. எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்ததாகவும் அப்போது 07.07.2014 ம் தேதி மாலை 04.30 மணியளவில் நானும் சாட்சி ராதாகிருஷ்ணனும் திங்கள் சந்தை ஆட்டோ ஸ்டேண்டில் இருந்த போது 2 வது எதிரி ராஜேஷ் என்பவர் சாட்சி ராதாகிருஷ்ணனிடம் ஆட்டோவை சவாரி போக வேண்டும் என்று கூப்பிட்டதாகவும் ராதாகிருஷ்ணன் சவாரிக்காக ஆட்டோ எடுத்துச் சென்றதாகவும் அதன் பிறகு ராதாகிருஷ்ணன் சவாரிக்கு அழைத்துச் சென்ற எதிரிகள் அவரை

**கத்தியால் இடது வயிற்றில் குத்தி ரத்தக் காயம் ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டதாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**குறுக்கு விசாரணை- ( எதிரிகள் தரப்பில்)**

**இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**